

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 150 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 24 – செவ்வாய்க்கிழமை 09 ஜனவரி 2024 – வெளியீர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 150 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 24 - Tuesday 09 January 2024 - Dak 8 Pages ₹ 5.00


## உலக முதலீட்டாளர்களின்

# முதல் முகவரி தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பெருமிதம்!

சென்னை, ஜன. 9 -

**“உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் முதல் நாளே பல வெற்றிகரமான குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடந்தேறியிருப்பதால் உலக முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு தான்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

“தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-இன் முதல் நாள் பல வெற்றிகரமான, குறிப்பிடத்தக்க நிகழ்வுடன் நடந்தேறியுள்ளது” என்றும்

“இன்று மாலை (திங்களன்று மாலை) எனது நிறைவுரையில், இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாடு பெற்றுள்ள மொத்த முதலீடுகளின் மதிப்பை நான் அறிவிக்கவுள்ளேன்” என்றும்,

“தெற்காசியாவின் முதன்மை மாநிலமாக உயர்ந்து வரும் தமிழ்நாடு தான், உலக முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்பதே நமது நிலையான செய்தியாக இருந்து வருகிறது” என்றும் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” யை தொடங்கி வைத்தார். விழாவில் தலைமையுரை ஆற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் நிலவும் சிறந்த தொழில் சூழல் பற்றி எடுத்து கூறினார்.

இந்நிகழ்வின்போது, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் டாடா எலெக்ட்ரானிக்ஸ், பெகட்ரான், டி.வி.எஸ். குழுமம், மிட்சுபிஷி, ஏ.பி. மோலார் மெர்ஸ்க், ஹூண்டாய், JSW, அசோக் லேலண்ட் மற்றும் வின்பாஸ்ட் ஆகிய முக்கிய நிறுவனங்களின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

### கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கை வெளியீடு!

தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024 மற்றும் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள், வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, க்வால்காம் டிசைன் சென்டர் மற்றும் ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களை தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” தொடக்க விழாவில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் ஸ்மார்ட்போன்கள் மற்றும் மின்னணு பாகங்கள் உற்பத்தி தொழிற்சாலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் ரந்திர் தாக்கூர், ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமைச் செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மேலும், ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானி அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார். தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியினை தெரிவித்தார்.

### எந்த நிறுவனம் எவ்வளவு முதலீடு!

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல்வேறு நிறுவனங்கள் கோடிகளைக் கொட்டி முதலீடு செய்துள்ளன. எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு முதலீடு செய்துள் ளன என்பது பற்றிய விவரம் வருமாறு:-

1. ரிலையன்ஸ் ஜியோ ரூ.35 ஆயிரம் கோடி முதலீடு (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலை)

2. கோத்ரேஜ் நிறுவனம் ரூ.515 கோடி முதலீடு (செங்கல்பட்டில் உற்பத்தி மையம்) 446 பேருக்கு வேலை.

3. டாடா எலெக்டரானிக்ஸ் ரூ. 12 ஆயிரத்து 82 கோடி முதலீடு (கிருஷ்ணகிரியில் செல்போன் உற்பத்தி மையம்) 40 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. பெகட்ரான் ரூ.1000 கோடி (நுகர்வோர் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மையம்) 8 ஆயிரம் பேருக்கு வேலை.

5. வே.எஸ். டபிள்யூ ரூ.12 ஆயிரம் கோடி (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் 6,600 பேருக்கு வேலை)

6. டி.வி.எஸ். குழுமம் ரூ.5 ஆயிரம் கோடி (தமிழ்நாடு முழுவதும் திட்டங்கள் 500 பேருக்கு வேலைவாய்ப்பு)

7. சீன நாட்டின் மிட்சுபிஷி நிறுவனம் ரூ.200 கோடி (கும்மிடிப்பூண்டியில் மோட்டார் தொழிற்சாலை தொடங்கப்பட உள்ளது)

8. வியட்நாம் நாட்டின் முன்னணி மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான வின்பாஸ்ட் ரூ.16 ஆயிரம் கோடி (தூத்துக்குடியில் தொழிற்சாலை அமைகிறது)

9. ஹூண்டாய் ரூ.6 ஆயிரம் கோடி (காஞ்சிபுரத்தில் பெட்ரோலிய மின்சார வாகன கார் பேட்டரி தயாரிப்பு நிறுவனம் தொடங்கப் படுகிறது)

10. குவால்காம் நிறுவனம் ரூ.177.27 கோடி முதலீடு செய்துள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல்வேறு முன்னணி நிறுவனங்கள் முதலீடு செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்து இட்டுள்ளன. முகேஷ் அம்பானியின் ஜியோ நிறுவனம், ஹூண்டாய் நிறு வனம் என பல்வேறு நிறுவனங்கள் பல ஆயிரம் கோடி ரூபாயை தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளன.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இரும்பு தயாரிப்பு தொழிற்சாலை அமைய இருப்பதன் மூலம் 6 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் மின்சார கார் பேட்டரி தயாரிப்பு நிறுவனம் தொடங்கப்படுவதன் மூலம் அங்கும் ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பை பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருப்பெரும்புதூரில் ஹூண்டாய் நிறுவனம் ஆலை விரிவாக்கப் பணியை மேற்கொள்ள உள்ளது. கிருஷ்ணகிரியிலும் டாடா நிறுவனம் தங்களது தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய உள்ளது.

இதனால் அந்த மாவட்ட மக்களும் பயன் அடைய உள்ளனர். கோத்ரேஜ் நிறுவனம் செங்கல்பட்டில் புதிய ஆலையைத் தொடங்க உள்ளதன் மூலம் அங்கும் வேலைவாய்ப்பு பெருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக தமிழ் நாட்டுக்கு முதலீடுகள் குவிந்துள்ளதால் 40,500 பேருக்கு வேலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மாநாட்டில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார மையமும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் மேம்பட்ட தொழில் சூழல் மற்றும் மனித வளம் ஆகியவற்றை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தி புதிய தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் இம்மாநாடு அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள், தொழில் துறை வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த உலக முதலீட்டாளர்களின் மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சி குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க, “உலக முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடுதான்” என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## உலக முதலீட்டாளர்களின் 2-ஆம் நாள் மாநாடு!

# 300க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகின!

சென்னை, ஜன. 8-

சென்னையில் நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்று, முதலமைச்சர் முன்னிலையில் நேற்று 300க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

2030ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார். இதற்காக சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதலமைச்சர், முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக சென்னை நந்தம்பாக்கத்தில் இரண்டு நாட்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டின் தொடக்கத்திலேயே, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், டாடா எலெக்ட்ரானிக்ஸ், பெகட்ரான், டிவிஎஸ் குழுமம், மிட்சுபிஷி, ஏ.பி. மோலார் மெர்ஸ்க், ஹூண்டாய், JSW, அசோக் லேலண்ட் மற்றும் வின்பாஸ்ட் ஆகிய முக்கிய நிறுவனங்களின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. முதல் நாளில் 5.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள தொழில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பல்வேறு நிறுவனங்களுடன் கையெழுத்தாகின.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தலைமைத்துவம், அதன் நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership, Sustainability and Inclusivity) ஆகிய கருப்பொருட்களை கொண்டு இரண்டாவது நாளாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. நேற்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதனைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

---

## உலக முதலீட்டாளர் மாநாடு:

# குறு, சிறு நிறுவனங்களிடமிருந்து ரூ.40 கோடி கொள்முதல்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேட்டி!

*சென்னை, ஜன. 9 -*

*சென்னையில் நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் 2ம் நாளான நேற்று குறுசிறு தொழில்துறை சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. துறையமைச்சர் தா.மோ. அன்பரசன் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.*

*முதலீட்டாளர்கள் மாநாட்டில் நடத்தப்பட்டு வரும் வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பின் போது, குறுசிறு தொழில்துறை சார்ந்த 174 நிறுவனங்களிடமிருந்து 50.70 லட்சம் அமெரிக்க டாலருக்கு, அதாவது, சுமார் 40 கோடி ரூபாய்க்கு கொள்முதல் நடைபெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார். இதில் 16 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் 73 புதிய முதல்முறை ஏற்றுமதியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தா. மோ.அன்பரசன் தெரிவித்தார்.*

*தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தாமோ அன்பரசன், “சிறு குறு தொழில்துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள்” குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிடுவார் என தெரிவித்தார். குறு, சிறு கருத்தரங்கு நிகழ்ச்சியில் இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தென் மண்டல நிர்வாகிகள் இஸ்ரார் அகமது, ஹபீப் உசேன், தொழில் துறையின் அரசுச் செயலர் வி.அருண்ராய், MSME துறையின் அரசுச் செயலர் அர்ச்சனா பட்நாயக், மற்றும் அதிகாரிகள், ஏற்றுமதியாளர்கள், தொழில் அதிபர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*